# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் சார்பெழுத்து

அ) உ ஆ) ட் இ) த ஈ) ம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. செந்தமிழ் என்ற சொல் குறிப்பது தமிழின்

அ) செம்மையை ஆ) பசுமையை
இ) இளமையை ஈ) இனிமையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. இரவும்பகலும் என்பதில் வந்துள்ள இடைச்சொல்

அ) உம் ஆ) இரவு இ) பகல் ஈ) வும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா.

அ) பொன்விழா ஆ) பவளவிழா
இ) வைரவிழா ஈ) வெள்ளிவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. அவன் + கு என்பதைச் சேர்த்தால் வருவது

அ) அவன்னுக்கு ஆ) அவண்ணுக்கு இ) அவனுக்கு ஈ) அவணுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. போர்த்துக்கேயர் பெங்சூற்றர்க் கோட்டையைக் கட்டிய இடம்

அ) முல்லைத்தீவு ஆ) ஆனையிறவு
இ) கற்சிலைமடு ஈ) வெற்றிலைக்கேணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. பெண்களின் அடிமைத்தளை நீங்கிடக் குரல் கொடுத்தவர்

அ) உருத்திரமூர்த்தி ஆ) காசிஆனந்தன்
இ) பாரதியார் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. காட்டுமல்லிகை என்ற பாடத்தில் செருக்கொடு மலர்ந்திருந்த மலர்

அ) காட்டு மல்லிகை ஆ) குவளை இ) செவ்வந்தி ஈ) முல்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. வந்தனர் என்பதன் விகுதி

அ) ர் ஆ) னர் இ) அர் ஈ) நர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. யானையின் இளையது கன்று போல் கீரியின் இளையது

அ) பிள்ளை ஆ) குருளை இ) பறழ் ஈ) குட்டி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. நெல்லிக்கனியின் சிறப்புப் பற்றி அதியர்மானுக்குக் கூறியவர்

அ) குமணன் ஆ) ஔவையார் இ) துறவி ஈ) வீரர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. ஔவையாரது பாடல்கள் மிகவும் சிறந்தவை. இதில் வந்துள்ள வேற்றுமை உருபு

அ) அது ஆ) ஐ இ) ஆல் ஈ) கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. 'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா' எனும் ஆசுகவிப் பாடலைப் பாடியவர்

அ) உருத்திரமூர்த்தி ஆ) கல்லடிவேலுப்பிள்ளை

இ) காளமேகம் ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. அளவின்றிச் செலவழித்தல் என்னும் கருத்தை வெளிப்படுத்தும் மரபுத்தொடர்.

அ) வாய்காட்டல் ஆ) தோள் கொடுத்தல்

இ) அள்ளி இறைத்தல் ஈ) ஏட்டுச்சுரக்காய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. **குறள் :** தன்னெஞ் சறிவது ____________________ பொய்த்தபின்

தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

அ) மெய்யற்க ஆ) பொய்யற்க இ) செய்யற்க ஈ) வைதற்க

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. குலசேகரம் வைரமுத்து என்ற பெயருக்குரியவன்

அ) சங்கிலியன்   ஆ) மருதுபாண்டியன்
இ) பண்டாரவன்னியன்   ஈ) கயிலைவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. திறமையின் ஆற்றல் என்ற கருத்தைக் குறிக்கும் பழமொழி

அ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்   ஆ) இரக்கப் போனாலும் சிறக்கப்போ
இ) குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை   ஈ) பாடின்றி பட்டமில்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. மூன்று + நூறு என்பதைப் புணர்த்தினால்

அ) முந்நூறு   ஆ) முன்நூறு
இ) முன்னூறு   ஈ) முண்ணூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. 'தென்திசையைப் பார்க்கின்றேன் என்சொல்வேன்' எனத் தொடங்கும் பாடல் உணர்த்துவது

அ) கனிவு   ஆ) சினம்   இ) நிமிர்வு   ஈ) கழிவிரக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. பாய்கிறது என்பது

அ) பலர்பால்   ஆ) ஒன்றன்பால்
இ) ஆண்பால்   ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. கோழி கொக்கரிக்கும் அது போல் குயில்

அ) பேசும்   ஆ) கூவும்   இ) அலறும்   ஈ) அகவும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நிலவன் அக்கம்பக்கம் பாராது தெருவைக் கடந்தான். இதில் வந்துள்ள அக்கம்பக்கம் என்பது

அ) இரட்டைக்கிளவி   ஆ) இணைமொழி
இ) அடுக்குத்தொடர்   ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. மணிமேகலை என்ற காப்பிய நூலை எழுதியவர்.

அ) இளங்கோவடிகள் ஆ) சீத்தலைச்சாத்தனார்
இ) நாதகுத்தனர் ஈ) திருத்தக்கதேவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. தமிழினி பள்ளியிலிருந்து ஓடி வந்தாள். இதில் வந்துள்ள ஓடி என்பது

அ) பெயரெச்சம் ஆ) வினைமுற்று
இ) தொழிற்பெயர் ஈ) வினையெச்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ஆய்ச்சியர் கைவந்த பின்னர் நீர் பெற்ற பெயர்

அ) நீர் ஆ) கார் இ) மோர் ஈ) தயிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. உடல் நீரால் தூய்மை அடைவது போல் உள்ளம் தூய்மை அடைவது

அ) வாய்மையால் ஆ) மகிழ்ச்சியால் இ) பொய்மையால் ஈ) துன்பத்தால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வள்ளல் என்ற சொல் குறித்து நிற்பது.

அ) வீரனை ஆ) பகைவனை இ) கொடையாளியை ஈ) ஏழையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்த மன்னன்

அ) எல்லாளன் ஆ) இந்திரன் இ) அதியமான் ஈ) இராவணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. கயல் விழி என்ற உவமை அணியில் வந்துள்ள உவமேயம்.

அ) அழகு ஆ) விழி இ) கயல் ஈ) மீன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பின்வருவனவற்றுள் வியங்கோள் வினை

அ) வாழ்க ஆ) போ இ) நட ஈ) கூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

**புள்ளிகள் 30**

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

சிறுவன் ஒருவன் கடை ஒன்றில் வேலை பார்த்து வந்தான். ஒரு நாள் நள்ளிரவிலே நிகழ்ச்சி ஒன்றில் கலந்து விட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்தார் ஒரு மூதாட்டி. வழியில் சிறுவனின் கடையில் விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக் கண்டார். சிறுவனின் கடைக்குச் சென்று கதவைத் தட்டினார். தூக்கக் கலக்கத்தில் இருந்த சிறுவனிடம் ஒரு இறாத்தல் தேயிலை தரும்படி கேட்டார். சிறுவன் தேயிலையை நிறுத்துக் கொடுத்துவிட்டு அதற்கான பணத்தைப் பெற்று மேசையில் வைத்துவிட்டு மீண்டும் தூங்கி விட்டான். விடிந்ததும் எழுந்து பார்த்தான். தராசில் அரை இறாத்தல் படியும் மேசையில் ஒரு இறாத்தலுக்கான பணமும் இருப்பதைக் கண்டான். உடனே தான் தூக்கக் கலக்கத்தில் மூதாட்டிக்கு அரை இறாத்தல் தேயிலையைக் குறைத்து கொடுத்து விட்டேனே என்று மனம் வருந்தினான். உடனே அரை இறாத்தல் தேயிலையை எடுத்துக் கொண்டு போய் மூதாட்டியின் வீட்டைத் தேடி அவரிடம் கொடுத்து மன்னிப்புக் கேட்டான். 'வளரும் பயிரை முளையில் தெரியும்' என்ற பழமொழிக்கிணங்க அச்சிறுவன் பின்னாளில் அமெரிக்கா நாட்டு முதல்வரானார். அவர் தான் ஆபிரகாம் லிங்கன்.

* இறாத்தல் = நிறுத்தல் அளவை

1. இக்கதையில் வந்த சிறுவனின் பெயர் என்ன?

______________________________________________

2. மூதாட்டி சிறுவனிடம் என்ன பொருள் வாங்கினார்?

______________________________________________

______________________________________________

3. இங்கு வந்துள்ள பழமொழியை எழுதுக.

______________________________________________

______________________________________________

4. சிறுவன் ஏன் மனம் வருந்தினான்?

______________________________________________

______________________________________________

5. இக்கதையில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

**புள்ளிகள் 10**

## 3) பாடநூல் வினாக்கள் ஏழில் - ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. தொல்காப்பியத்தை எப்படிக் கூறிப் பாராட்டுவர்?

2. அதியர்மான் நெல்லிக்கனியைத் தான் உண்ணாமல் ஏன் ஔவையாருக்குக் கொடுத்தான்?

3. திருவள்ளுவர் கூறும் நட்பின் சிறப்புகள் இரண்டு எழுதுக.

4. கவிஞர் காட்டு மல்லிகையைப் பாடற் பொருளாக்கிப் பாடக் கரணியம் என்ன?

5. எத்திசையில் விடிவெள்ளி எழும்?

6. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
   இடுக்கண் களைவதாம் நட்பு
   என்ற குறளின் பொருளைத் தருக.

7. பண்டார வன்னியன் ஆங்கிலேயரது மூன்று பீரங்கிகளையும் எங்கே கைப்பற்றினான்?

**புள்ளிகள் 10**

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பூக்கின்ற மலர்கள் எல்லாம் பூக்கள் அல்ல
புதியனவாய் வருவதெல்லாம் புதுமை அல்ல
ஈர்க்கின்ற மணம்பரப்பும் மலர்களைத் தாம்
எல்லோரும் போற்றிடுவர் - நலம்பரப்பிக்
காக்கின்ற புதுமையைத்தான் ஏற்பர் சான்றோர்
காகிதப் பூப்போல் விரியும் புதுமை எல்லாம்
போக்குதலே அறிவுடைமை - மயங்கி நின்று
புதுமையெனும் பெயராலே வீழ்தல் வேண்டாம்
செங்கதிரால் தாமரைகள் சிரித்திருக்கும்
சேர்மதியால் அல்லி மலர் வாய்சிரிக்கும்
பொங்கிவரும் மழை வரவால் பயிர்சிரிக்கும்
பொய்யாத மொழிக்குறளால் புலம் சிரிக்கும்
துங்கமுறச் சிரித்திருக்கும் அறிவால் ஆய்ந்து
தூயனவன் சொல் வழியில் பொதுமைகாண
இங்கினிநாம் முயல்வமேல் புதுமை பூக்கும்
புல்லடிமை தேய்ந்து சமநிலையே வாய்க்கும்

1. எவற்றை பூக்கள் அல்ல என்கின்றார் கவிஞர்?

______________________________________________

______________________________________________

2. எது அறிவுடமை எனப்படுகின்றது?

______________________________________________

______________________________________________

3. எல்லோரும் எதைப் போற்றிடுவர்?

______________________________________________

______________________________________________

4. சான்றோர் எதைப் போற்றிடுவர்?

______________________________

______________________________

5. புதுமை எனும் பெயரால் எதை வேண்டாம் என்கின்றார் கவிஞர்?

______________________________

______________________________

**புள்ளிகள் 10**

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

   1. மூன்றாம் வேற்றுமை ______________________________

      ______________________________

   2. ஐந்தாம் வேற்றுமை ______________________________

      ______________________________

2. கூட்டுச்சொல்லியம், தனிச்சொல்லியம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

   கூட்டுச்சொல்லியம் ______________________________

   தனிச்சொல்லியம் ______________________________

3. பின்வரும் மரபுத்தொடர்களுக்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுகள் தருக.

   அ) இரட்டைக்கிளவி ____________________

   ஆ) அடுக்குத்தொடர் ____________________

   இ) இணைமொழி ____________________

4. மலர்க்கை என்ற உவமையணித் தொடரின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை, என்பவற்றைத் தருக.

உவமானம் : ______________________

உவமேயம் : ______________________

பொதுத்தன்மை : ______________________

5. தெரிநிலை வினை முற்றுகள் மூன்று தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

| புள்ளிகள் 15 |
|---|

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Der Winter ist für die Kinder eine beliebte Jahreszeit. Das Bauen eines Schneemannes bereitet ihnen Freude. Sie formen Schneebälle und spielen, indem sie sich damit gegenseitig bewerfen. Sie mögen es auf dem Schnee zu rutschen. Im Winter sind die Tage kürzer und die Nächte länger.

De winter is een leuke periode voor kinderen. Ze maken sneeuwpoppen en daar worden ze vrolijk van ,en gooien sneeuwballen naar elkaar. Schaatsen vinden ze leuk. Tijdens de winter is er korter dag en langer avond

Vinter är barnens favorit årstid. De blir glada av att göra en snögubbe med snö. De gör snöbollar och leker genom att kasta dom på varandra. De tycker om att pulka. Under vintern är dagarna korta. Nätterna är långa.

Vinter er en årstid, børnene kan lide. De kan lide at bygge snemand i sneen. De laver snebolde og kaster efter hinanden. De kan lide at kælke i sneen. Dagene er korte om vinteren. Nættene er lange om vinteren.

L'inverno è la stagione preferita' dei bambini. Con la neve si divertono a fare il pupazzo di neve. Fanno le palle per giocare a tirarsele a vicenda. Amano sciare sulla neve. Durante l'inverno i giorni sono brevi. Le notti sono lunghe

L'hiver est la saison favorite des enfants. Ils s'amusent en reproduisant un bonhomme de neige. Ils jouent à faire des boules de neiges et les jeter les un sur les autres. Lorsque l'hiver apparaît, la journée se fait courte et la nuit est longue.

Children like winter season . They make snowmen with snow and rejoice in it. They make snow balls and throw them at each other. They like ice skating. At winter season, the day time is short: night time is long.

Barna liker vinteren. De koser seg med å lage snømann. De lager snøballer og kaster til hverandre. De liker å skli på snøen. Om vinteren er dagen kort og natten lang.

புள்ளிகள் 05

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ பாரதியும் பெண்விடுதலையும்

☆ கூடிவாழ்ந்தால் கோடி நன்மை

★ நீர் கண்டுகளித்த ஓர் இயற்கைக் காட்சி

புள்ளிகள் 20